**ஒக்டோபர் 28, 2022**

**கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் புதிய கட்டிட திறப்புவிழாவின் போது தூதுவர் ஜூலி ஜே. சங் ஆற்றிய உரை**

தூதரகத்தின் பிரதிப் பிரதானி டக் சொனெக்கிற்கு நன்றி. இலங்கை ஜனாதிபதி கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும், கௌரவ சபாநயகர், கௌரவ அமைச்சர்கள், வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் ஐ.நா. முகவரமைப்புகளின் பிரதானிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மரியாதைக்குரிய விருந்தினர்கள், மற்றும் அமெரிக்கத் தூதரகத்தின் சக பணியாளர்களுக்கும் எனது வணக்கம்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் புதிய கட்டிடத்தொகுதி திறப்பை சிறப்பிப்பதன் நிமித்தம் இன்று எம்முடன் இணைந்து கொண்ட உங்கள் அனைவரையும் வரவேற்பதுடன், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். நான் கடலுக்கு மிகத் தொலைவில்லாத தெற்கு கலிபோர்னியாவில் வளர்ந்த ஒருவர் என்பது உங்களில் பெரும்பாலானோருக்குத் தெரியும். இன்றைய மாலைப்பொழுதில் நாம் பகிர்ந்து கொள்ளும் கடலின் இந்த அழகிய காட்சியானது நாம் எப்படி இணைந்துள்ளோம் என்பதை எனக்கு நினைவூட்டுகிறது. இது எமது புதிய இல்லம். நான் இந்த கட்டிடத்தை நேசிக்கிறேன். ஜன்னல்கள், வெளிச்சம், கலை, மற்றும் அது மக்களை ஒன்றிணைக்கும் வழிகள் என நான் இந்த கட்டிடத்தினுள் நுழையும் ஒவ்வொரு நாளும் நன்றியுள்ளவளாக இருக்கிறேன். இதற்கு நிறைய உழைக்க வேண்டியிருந்தது. மேலும் என்னைப் பொறுத்தவரையில், மக்களிலான எமது முதலீடு மற்றும் இலங்கையுடனான இருதரப்பு உறவுக்கான மிகப்பெரிய சான்றொன்றை இது பிரதிநிதித்துவப் படுத்துகிறது. இராஜாங்க திணைக்களத்திலுள்ள எனது சக பணியாளர்களுக்கும் மற்றும் இந்த ஸ்தானத்தை வடிவமைத்து நிர்மாணித்த இங்குள்ள அற்புதமான கைவினைஞர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். உங்களது அபாரமான பணியை நான் மதித்து பாராட்டுகிறேன். மற்றும் நானும் எனது அணியும் முக்கியமான இராஜதந்திர பணியை மேற்கொள்கிறோம் என்ற வகையில், அதற்கு நியாயமாக செயற்பட ஒவ்வொரு நாளும் பாடுபடுவோம்.

அமெரிக்காவும் இலங்கையும் 70 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இராஜதந்திர உறவுகளை கொண்டுள்ளன என்பது உங்களுக்குத் தெரியுமா? உண்மையில், நாளைய தினம் எமது உத்தியோகப்பூர்வமான இருதரப்பு இராஜதந்திர உறவின் 74 ஆவது ஆண்டு நிறைவாகும். தூதுவர் சேர் க்ளோட் குரே 1948 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி சிலோன் தூதரகத்தை வாஷிங்டன் டி.சி.யில் திறந்துவைத்தார் என்பதை வரலாற்று அவதானிகள் நினைவுகூருவர். அதன் பின்னர் ஒரு வருடத்துக்கும் குறைந்த காலப்பகுதிக்குள் 1949 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் ஃபீலிக்ஸ் கோல் இலங்கைக்கான முதலாவது அமெரிக்கத் தூதுவராக தமது நியமனச் சான்றுகளை கையளித்தார். அடுத்த ஏழரை தசாப்தங்களில் வாஷிங்டன் மற்றும் கொழும்பிலுள்ள எமது தூதரகங்கள் பாரிய மாற்றங்களை கண்டுள்ளன. எனக்கு முன்னதாக இந்த தூதரகத்தை 27 தூதுவர்கள் வழிநடத்திச் சென்றுள்ளனர். அந்த காலப்பகுதியில் எமது பணியின் வேகம் அதிகரித்ததுடன், எமது பங்காண்மையின் பரப்பு விரிவடைந்தது. தூதுவர்களும் அவர்களது அணியினரும் அவர்களது பணி நிலைகளில் குறுகிய காலங்களுக்கு மட்டுமே இருக்க முடிந்த போதிலும், மிகவும் முக்கியமான விடயங்கள்

மாற்றமின்றி அப்படியே இருந்தன. அதாவது, எமது நட்புறவு மற்றும் பங்காண்மையின் அடித்தளமானது நீண்ட காலமாக நீடித்ததுடன், தொடர்ந்து வளர்ந்தும் வருகிறது.

இந்த அழகிய மற்றும் சிந்தனையார்வத்துடன் வடிவமைக்கப்பட்ட கட்டிடத்தில் எமது இரு ஜனநாயக நாடுகளுக்கும் இடையிலான வரலாற்றை பிரதிபலித்து எமது பகிரப்பட்ட வெற்றியின் அடிப்படையில் முன்னேறுவதற்கு நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பில் உறுதிபூணுமாறு இங்கிருக்கும் ஒவ்வொருவரையும் நான் ஊக்குவிக்கிறேன். இன்று இங்கு பிரசன்னமாகியிருக்கும் நீங்கள் அனைவரும் எமது இருதரப்பு உறவு பலப்படுத்தப்படுவதை ஆதரிப்பவர்களே என்பதுடன், நீங்கள் ஒவ்வொருவரும் தனித்தனியான மாற்றமொன்றை ஏற்படுத்தவும் முடியும். அது இலங்கையிலான முதலீட்டு மற்றும் வர்த்தக சூழல் மற்றும் அமெரிக்காவுடனான இருதரப்பு வர்த்தகம், காலநிலை நெருக்கடி, உணவுப் பாதுகாப்பு போன்ற பகிரப்பட்ட சவால்களுக்கான கூட்டு ஒத்துழைப்பு அல்லது சட்டத்தின் ஆட்சி, ஊடகச் சுதந்திரம், பாதுகாப்பானதும் திறந்ததுமான கடல்வழி வர்த்தக பாதைகள், மற்றும் அனைத்து இலங்கையர்களினதும் பாதுகாப்பு மற்றும் சுபீட்சம் உள்ளிட்ட எமது பகிரப்பட்ட ஜனநாயக இலட்சியங்களை நிலைநிறுத்தல் என எதுவாகவும் இருக்கலாம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து மாற்றமொன்றை ஏற்படுத்த முடியும்.

அமெரிக்க இராஜதந்திரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட விடயங்களில் நிபுணத்துவம் கொண்ட இலங்கையர்களைக் கொண்ட எனது தூதரக அணியானது வளமான, ஜனநாயகமான, பாதுகாப்பான மற்றும் மீளெழுச்சி திறனுடைய இலங்கை என்ற எமது பகிரப்பட்ட இலக்குகளை முன்னேற்றுவதற்கு உறுதிப்பூண்டுள்ளது. எமது பகிரப்பட்ட இலக்குகளை அடைவதன் நிமித்தம் பல்வேறு இருதரப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் நாம் ஒவ்வொரு நாளும் பணியாற்றி வருகிறோம். நாம் இந்த கட்டிடத்திற்கு மாற்றமாகி கொண்டிருந்த போதும் கூட நாம் எமது பொருட்களைக் கூட ஒழுங்குபடுத்தியிருக்காத நிலையிலும் இருதரப்பு ஈடுபாட்டின் முக்கியமான பணிகளை தொடர்வதற்கான வசதிகளை சிரேஷ்ட அமெரிக்க அதிகாரிகளுக்கு ஏற்படுத்தி கொடுத்திருந்தோம். இலங்கை அதன் பொருளாதார வரலாற்றில் மிகவும் சவாலான காலப்பகுதிக்கு முகம்கொடுத்துக் கொண்டிருக்கிறது என்ற வகையில், அதிர்ஷ்டவசமாக, அது நன்கு பயன்படுத்திக் கொள்ள முடிந்த நற்செய்திகளை எமது விருத்தினர்கள் கொண்டு வந்தனர். சர்வதேச அபிவிருத்திகான அமெரிக்க முகவரமைப்பின் (USAID) பிரதானி சமந்தா பவர் கடந்த மாதம் இலங்கை வந்திருந்த போது, விவசாயிகளுக்கு உரங்களை கொள்வனவு செய்ய உதவுவதற்கான புதிய உதவித் தொகையாக 40 மில்லியன் அமெரிக்க டொலர்களை அறிவித்ததுடன், மனிதாபிமான உதவியாக இன்னுமொரு 20 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் அறிவித்திருந்தார். இந்த உதவிகளானது, இலங்கையின் சிறு மற்றும் நடுத்தர வர்த்தகங்களுக்கான 120 மில்லியன் டொலர் நிதியுதவி, இலங்கை பால் உற்பத்தித் துறைக்கான 27 மில்லியன் அமெரிக்க டொலர்கள், மற்றும் இலங்கையின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு பயனளிக்கும் நிமித்தம் புதிய மனிதாபிமான, தொழில்நுட்ப, மற்றும் உணவுப் பாதுகாப்பு உதவியான 30 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் மேற்பட்ட தொகை ஆகியவற்றுக்கு மேலதிகமாகவே வருகின்றன. இந்த அறிவிப்புகளின் அடிப்படையில், ஐ.நா.வின் உணவு அமைப்புகளில் அமெரிக்காவை பிரதிநிதித்துவப்படுத்தும் தூதுவர் சின்டி மெக்கெய்ன் எமது உதவிகளின் தாக்கத்தை நேரில் பார்வையிடுவதற்கும் மனிதாபிமான நிகழ்ச்சித் திட்டங்களின் பயனாளிகள் மற்றும் அமுல்படுத்துவோரிடமிருந்து விடயங்களை நேரில்

கேட்டறிந்து கொள்வதற்காகவும் இலங்கை வருகை தந்திருந்தார். எமது உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ, முக்கியமான இந்தோ-பசுபிக் பங்காளர் என்ற வகையில் எமது ஒத்துழைப்பை மீள உறுதிசெய்யும் நிமித்தம் கடந்த வாரம் விஜயம் மேற்கொண்டிருந்தார். புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள உதவியானது தற்போதைய நெருக்கடியின் கடுமையான வலிகளை நிவர்த்தி செய்வதை இலக்காகக் கொண்டுள்ள அதேநேரம், இலங்கையின் நீண்டகால பொருளாதார வளர்ச்சிக்கு அமெரிக்கா அர்ப்பணிப்புடன் உள்ளது. இலங்கையின் கடன் தொடர்பில் நியாயமான வகையில் மறுபரிசீலனை செய்வதற்கான அதன் முயற்சிகளையும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெறுவதற்கான முன்னோக்கிய பாதையையும் நாம் ஆதரிப்பதுடன், இலங்கை மீண்டும் சுயமாக எழுந்து நிற்பதற்கு உதவும் தொழில்வாய்ப்புகள் மற்றும் அந்நியச் செலாவணியை உருவாக்கி இலங்கயின் தனியொரு மிகப்பெரிய ஏற்றுமதிச் சந்தையாக நாம் தொடர்ந்தும் இருக்கிறோம்.

நற்செய்திகள் இத்துடன் முடிந்துவிடவில்லை. பொருளாதார நெருக்கடியின் சவால்கள் இருக்கின்ற போதிலும், தடையின்றி தொடர்ந்து கொண்டிருக்கும் எமது இருதரப்பு வெற்றிகளை நாம் கொண்டாட முடியும். எமது அமெரிக்க - இலங்கை ஃபுல்பிரைட் கொமிஷனானது, எமது இரு தேசங்களினதும் கலாசாரங்களையும் ஒன்றிணைக்கும் மற்றும் இலங்கை மற்றும் அமெரிக்காவின் கல்வியறிவை பலப்படுத்தும் அதனது இருவழி பரிமாற்றங்களின் 70 ஆவது ஆண்டு நிறைவை அடுத்த மாதம் கொண்டாடவுள்ளது. இளம் தலைவர்கள் மற்றும் மாணவர்கள் தமது கற்றல்கள் மற்றும் தொழில்சார் ஆர்வங்களை மேம்படுத்திக் கொண்டு இலங்கை திரும்பி தமது கனவுகளை செயல்வடிவமாக்கிக் கொள்வதற்காக அமெரிக்கா பயணிக்கும் எமது கல்வி மற்றும் கலாசார பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னாள் மாணவர்களாக இன்று 8,000 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் இருக்கின்றனர். ஒவ்வொரு வாரமும் 150 இற்கும் மேற்பட்ட இலங்கை இடைநிலை பள்ளி மாணவர்கள் ஆங்கில அணுகல் (English Access) எனப்படும் எமது இரண்டு வருட புலமைப்பரிசில் திட்டத்தின் ஊடாக முற்றிலும் இலவசமாக ஆங்கிலம் கற்றுக்கொள்வதுடன், அவர்களின் இலங்கை ஆங்கில ஆசிரியர்கள் மாணவர்களை மையமாகக் கொண்ட பயிற்றுவிப்பு பாணிகளைக் கற்றுக்கொள்கின்றனர். ஒவ்வொரு நாளும், யாழ்ப்பாணம், கண்டி, மாத்தறை மற்றும் கொழும்பில் உள்ள எமது நான்கு அமெரிக்க தகவல் நிலையங்களில் ஏதேனும் ஒன்றில், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் அவர்களது ஆங்கில புலமை, தொழில்முனைவுத் திறன்கள், கலாசாரங்களுக்கு இடையிலான தொடர்பாடல் திறன்கள் மற்றும் வெளிப்படைத்தன்மை மற்றும் சமத்துவத்தை மதிக்கும் அனைவரையும் உள்வாங்கிய, பன்முகத்தன்மைக் கொண்ட சமூகமொன்றை ஆதரிக்கும் ஜனநாயக விழுமியங்களின் புரிதலை மேம்படுத்தும் கற்கைநெறிகள் மற்றும் செயற்பாடுகளில் கலந்துகொள்கின்றனர்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும், உள்நாட்டு திறனை அதிகரிப்பதற்கும், மற்றும் இலங்கை மக்களின் செழிப்பு மற்றும் நல்வாழ்வுக்கு ஒத்துழைப்பதற்கும் உதவும் பங்காண்மை, உதவி, மற்றும் வர்த்தக வாய்ப்புகளை வழங்கி 70 ஆண்டுகளுக்கு மேலாக அமெரிக்கா இங்கு எப்படி செயற்பட்டிருந்தது என்பதன் சுருக்கமே இவை. வார்த்தைகளிலும் சரி, செயல்களிலும் சரி நாம் நண்பர்கள் மற்றும் பங்குதாரர்கள் என்பதுடன், தற்போதைய சவால்களை வெற்றி கொள்வதில் எமது பகிரப்பட்ட எதிர்காலத்தையும் வெற்றியையும் நான் எதிர்பார்க்கிறேன். நான் எதிலும் நம்பிக்கை கொண்ட ஒரு நபர் என்பதுடன், எதிர்காலம் சாதகமான வாய்ப்புகளை கொண்டுள்ளது

என்று நான் நம்புகிறேன். ஆகவே, நாம் இன்று இங்கு ஒன்றாக கூடியிருக்கிறோம் என்ற வகையில், இந்த கட்டிடத்தின் செங்கல், சீமெந்து சாந்து (கலவை), ஒளி விளக்குள் மற்றும் கண்ணாடி ஜன்னல்களை மட்டுமன்றி, அதற்குள் இருக்கும் மனிதர்களின் மனங்களையும் கொண்டாடுவோம். இந்த புதிய வளாகத்தை இலங்கையுடனான எமது பங்காண்மைக்கானதும் மற்றும் கடினமான நேரங்களின் போதான ஒத்துழைப்புக்கானதுமான எமது உறுதிப்பாட்டை எமக்கு நினைவூட்டச் செய்வோம். அத்துடன், நாம் தொடர்ந்தும் இணைந்து பணியாற்றுவோம். நன்றி!